பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 01 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் ஜவுளித்துறை, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி வளர்ச்சியின் இயந்திரமாக முன்னேறியுள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** நூலகங்கள் சமூக மாற்றத்திற்கான கருவி என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

**3.** ஆரவல்லி மலைத்தொடர் பகுதியில் அமைந்துள்ள **Kumbhalgarh** சரணாலயம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**4.** ஜம்மு காஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை பிடிக்க மூன்றாவது நாளாக தேடுதல் பணிகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

**5.** சபரிமலை ஐயப்பன் கோவில் சொத்துகள் முறைகேடு தொடர்பான வழக்கில் அமலாக்கப்பிரிவினர் கேரளா, தமிழகம், கர்நாடகா மாநிலங்களில் **21** இடங்களில் இன்று சோதனை நடத்தினர்.

--இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு ஜவுளித்துறை முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங், நாளிதழ் ஒன்றில் வெளியிட்டுள்ள கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துகொண்டுள்ள பிரதமர், ஜவுளித்துறை பாரம்பரியத்திற்கு புது வடிவம் கொடுத்து வலுவான ஒரு தொழிலாக வளர்ந்துள்ளது என்று கூறியுள்ளார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் துறையாகவும், வளர்ச்சியின் இயந்திரமாகவும் ஜவுளித்துறை முன்னேறி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயசார்பு இந்தியாவின் வலிமையை பிரதிபலிக்கும் வகையில், உள்நாட்டு உற்பத்திக்கு ஜவுளித்துறை மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நூலகங்கள் சமூக மாற்றத்திற்கான கருவி என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மகாதேவ் தேசாய் நூலக விரிவாக்கக் கட்டிடத்தை திறந்துவைத்தபின் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள

திரு சி பி ராதாகிருஷ்ணன், புத்தகங்கள் மூலம் கிடைக்கும் அறிவு மனிதனின் செயல்பாடுகளை சீரமைத்து கட்டுப்பாடுகளுடன் நடந்துகொள்ள வழிவகுப்பதாக கூறியுள்ளார்.

சமூக பொறுப்பையும் நூல்கள் மனிதனுக்கு அளிப்பதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

ஆரவல்லி மலைத்தொடர் பகுதியில் அமைந்துள்ள **Kumbhalgarh** சரணாலயத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இத்தகவலை தெரிவித்துள்ள மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ், இப்பகுதியில் உள்ள தாவரங்களையும், விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பின்மூலம், வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்கள் பயன்பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை விவசாயம் மற்றும் வனப்பகுதியை பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் திரு புபேந்தர் யாதவ் கூறினார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி இந்தியா விரைந்து முன்னேறி வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று ஜிப்மர் மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உலகத்தரத்திலான சுகாதார கட்டமைப்பை இந்தியாவில் கொண்டுவருவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

தேசிய சுகாதாரக் கொள்கை, மருத்துவ சேவையை மட்டுமே அடிப்படையாக கொள்ளாமல், நோய் தடுப்பு, ஆரோக்கிய மேம்பாடு, மறுவாழ்வு உள்ளிட்டவைகளையும் கொண்டிருப்பதாக திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<>>>>>

இந்திய அஞ்சல்துறை **887** ஏடிஎம்-களை நிறுவி தனது சேவை கட்டமைப்புக்கு புத்துயிர் ஊட்டியுள்ளது.

இதுதொடர்பாக, தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அஞ்சல்துறை ஏடிஎம்-களை பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள் பணம் எடுப்பது, இருப்பை கவனிப்பது உள்ளிட்ட

வங்கி சேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சலக ஏடிஎம் சேவை கிராமப்புற மக்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பயன்பெறும் வகையில் அமையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்னனு பணப்பரிவர்த்தனை கட்டமைப்பில் அனைத்துத் தரப்பினரையும் இணைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டத்திற்கு அஞ்சல் துறை ஏடிஎம்-கள் வலு சேர்க்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவிய தீவிரவாதிகளை தேடும் பணி மூன்றாவது நாளாக தொடர்கிறது.

ஊடுருவல்காரர்களுக்கு உதவி செய்யும் உள்ளூர் பணியாளர்கள் சிலரை பாதுகாப்புப் படையினர் அடையாளம் கண்டு, அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூர் தொழிலாளர்களுக்கு தீவிரவாதிகள் ரேஷன் பொருட்களை அதிகஅளவில் வழங்கியிருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சத்ரு பகுதியில் உள்ள சோனார் கிராமத்தில் ஊடுருவிய தீவிரவாதிகளை தேடும் பணியை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டிருந்தபோது, துப்பாக்கிகள் மூலம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், பதில் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் பிஎஸ்என்எல் சேவையின் தரம் குறித்து தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

தொலைத்தொடர்பு சேவையின் தரத்தை நிர்ணயிப்பதற்கான காரணிகள், மொபைல் சேவையின் தரம் மற்றும் நெட்வொர்க் பகுதி உள்ளிட்டவை குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

தமிழகம், கேரளா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், கொல்கத்தா, இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட் உள்ளிட்ட பகுதிகளில் செல்போன் கோபுரங்களை விரிவான அளவில் அமைப்பது குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின்கீழ், அமலாக்கப்பிரிவினர் இன்று தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் **21** இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் உள்ள நகைகள் மற்றும் சொத்துக்களில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பான புகாரின் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

<<<<<<>>>>>

புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை கடந்த **13** மாதங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோபோட்டிக் அறுவை சிகிச்சைகள் செய்து சாதனை படைத்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அறுவை சிகிச்சை பிரிவு தலைவர் பேராசிரியர் திரு சுனில் **Chumber**, அறுவை சிகிச்சைக்குப்பின் நோயாளிக்கு ஏற்படும் வலி ரோபோட்டிக் சிகிச்சை மூலம் **50** சதவீதமாக குறைந்துள்ளது என்றும் கூறினார்.

ரோபோட்டிக் சிகிச்சை செய்து கொள்வதால், மருத்துவமனையில் நோயாளி தங்கியிருந்து சிகிச்சை பெறும் காலமும் கணிசமாக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் அவர்களின் மருத்துவ செலவுகள் கணிசமாக குறைந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அறுவை சிகிச்சை செய்யும் இடங்களில் நோய் தொற்று ஏற்படுவதும் கணிசமாக குறைந்துள்ளதாக பேராசிரியர் திரு சுனில் **Chumber,** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில், தேசிய மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் உதவித் திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் அவர்களுக்கு மிகுந்த பலனை அளித்திருப்பதாக திருப்பத்தூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் முடநீக்கியல் துறை வல்லுநர் திரு சுதாகர் தெரிவித்தார்.

***(Sound Byte — சுதாகர் - 45 Sec. )***

<<<<<<>>>>>>

தெரு நாய்களால் ஏற்படும் தொல்லைகளை கட்டுப்படுத்தும் நோக்கில், கடந்த **13-**ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மேனகா காந்தி தெரிவித்த கருத்துக்களுக்கு உச்சநீதிமன்றம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் திரு விக்ரம்நாத், திரு சந்தீப் மேதா, திரு என் வி அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வு, திருமதி மேனகாவின் கருத்து நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும் என்று தெரிவித்தது.

எந்தவொரு முன் யோசனையும் இல்லாமல், இதுபோன்ற கருத்துக்களை அவர் தெரிவிப்பதற்கும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

தற்போது திருமதி மேனகா காந்தி மீது நீதிமன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறிய நீதிபதிகள், நீதிமன்றத்தின் பெருந்தன்மையை தவறாக பயன்படுத்தக் கூடாது என்றும் எச்சரித்தனர்.

கடந்த **13**-ஆம் தேதி உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், தெரு நாய் கடியால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாநில அரசு சார்பில், பெரும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

தெருவில் திரியும் நாய் மற்றும் கால்நடைகளை கட்டுப்படுத்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மாநிலங்கள் பின்பற்றவில்லை என்றும் உச்சநீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

வதோதராவில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>**